செய்தி வெளியீடு எண்:278 நாள் :10.06.2014

மீன்வளத்துறையின் திட்டங்கள் குறித்தான மாதாந்திர ஆய்வுக்கூட்டம் மீன்துறை ஆணையர் அலுவலகத்தில் இன்று (10.6.2014) நடைபெற்றது.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. ஜெயபால் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசுச் செயலர் முனைவர் ச.விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள், மீன்துறை ஆணையர் டாக்டர். பீலா ராஜேஷ் இ.ஆ.ப. அவர்கள், மீன்துறை தலைமைப்பொறியாளர், தலைமையலுவலக மீன்துறை கூடுதல் இயக்குநர், மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வுக்கூட்டத்தில் மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் கடல்மீனவர்களுக்கான அரசுநலத்திட்டங்கள் , முக்கியமாக தற்பொழுது மின்னணு பண பரிவர்த்தனை வாயிலாக நிவாரணத் தொகை வினியோகிக்கப்பட்டுவரும் சிறப்பு மீனவர் நலத்திட்டங்களான மீன்பிடிப்புக் குறைந்த காலத்தில் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணம் ரூ.4,000/- வழங்குதல், மீன்பிடி தடைக்காலத்தில் மீனவ குடும்பங்களுக்கு ரூ.2000/- நிவாரணம் வழங்கும் திட்டத்தில் விடுபட்ட பயனாளிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குதல் மற்றும் சேமிப்பு நிவாரணத்திட்டத்தின் கீழ் விண்ணப்பம் பெறுதல், பணபட்டுவாடா குறித்து மாவட்ட வாரியாக ஆய்வு செய்து, நிவாரண உதவிகளை மீனவர்களுக்கு துரிதமாக சென்றடைய அறிவுரை வழங்கினார்கள். மீன்துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் மீன்பிடித்துறைமுக கட்டுமானப் பணிகள் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், இதர உள்நாட்டு மீன்வள மேம்பாட்டிற்கான வளர்ச்சி திட்டங்களுடன் நீர்தேக்க மீன்வள மேலாண்மை, நீர்வள நிலவள திட்டப்பணிகள், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டப்பணிகள் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்து இத்திட்டங்களை விரைவில் செயல்படுதிட ஆலோசனைகள் வழங்கினார்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மீன்துறை அலுவலர்களான மண்டல மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர்கள் இந்த ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஒம்/- பீலா ராஜேஷ்
மீன்துறை ஆணையர்

மீன்துறை ஆணையருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**